(இ) சேப்பாக்கம் தொகுதியில் சில பகுதிகளில் குடிசைகள் பிரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு,

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர், சிந்தாதிரிப்பேட்டை போன்ற பகுதிகளில் பல குடிசைகள் பிரிக்கப் பட்டு குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அங்கே நீண்டகாலமாகக் குடியிருந்து வருகிறவர்கள், ரேஷன் கார்டுகளை வைத்துக் கொண்டிருப் பவர்கள். அத்துடன் ஓட்டர்ஸ் லிஸ்ட்டிலும் பெயர்கள் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது திடீரென்று எந்தவிதமான அறிவிப்புமில்லாமல் — அவர்களுக்கு மாற்று இடம்கூட தரப்படாமல் — அவர்களுடைய குடிசைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்கள் வேறு இடத்திலே போய் தொழில் செய்யவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே அரசாங்கம் அந்த உத்தரவை நிறுத்தி வைத்து அவர்களுக்கு உதவிட முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

3. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து சென்ற மீனவர்கள் காணாமற் போனது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்பு பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். அடுத்து, திருவாளர்கள் கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''18-1-1987 அன்று குமரி மாவட்டம் தூத்தூர் என்ற இடத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் காணவில்லை என்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.